தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **20-3-2015**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழகத்தில் மரவளர்ப்பை ஊக்குவிக்க ஒரு கூட்டமைப்பு

தற்போது காகிதம், ஒட்டுப்பலகை, தீக்குச்சி மற்றும் உயிரி எரிபொருள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் மரம் சார்ந்த இடுபொருள் தேவை மிக அதிகமாக உள்ளது. உதாரணமாக இந்தியாவில் சுமார் **700** காகித ஆலைகள் உள்ளன. அவற்றின் மரத்தேவை **5.04** மில்லியன் டன்னாக உள்ளது ஆனால் தற்போது **2.76** மில்லியன் டன் மரம் மட்டுமே நம் நாட்டிலிருந்து கிடைக்கின்றது. அதே போல, தனிமனித தீக்குச்சித் தேவை **2.45** கிலோவிலிருந்து **(1920)** தற்போது **6.0** கிலோவாக உயர்ந்துள்ளதால் இந்தியாவிலேயே அதிக அளவில் தீக்குச்சி தொழிற்சாலைகள் இருக்கும் தமிழ்நாட்டில், அதிக அளவில் மர இடுபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும், தீப்பெட்டிகள் செய்யத் தேவையான மர இடுபொருள் கிடைப்பதில் கூட **44** சதவிகித தட்டுப்பாடு காணப்படுகின்றது. இதுபோல அதிகமான மரத்தேவை இருக்கும் போதிலும், இந்தியாவில் வனங்கள் அழிந்து வருவதை தடுக்க **1988** ஆம் ஆண்டு தேசிய வனக்கொள்கை வெளியிடப்பட்டது. இக்கொள்கைப்படி, மரம் சார்ந்த தொழிற்சாலைகள் தங்கள் இடுபொருள் தேவைக்கு, வனங்களில் இருந்து மரம் வெட்டுவது தடை செய்யப்பட்டது.

தொழிற்சாலைகள் விவசாயிகளுடன் உடன்படிக்கையின் அடிப்படையில் ‘வேளாண்மை காடுகள்’ அமைத்து தங்கள் மர இடுபொருள் தேவையை நிறைவு செய்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், இந்த அரசு கொள்கையை செயல்படுத்துவதில் பல சிரமங்கள் காணப்பட்டன. அதாவது, அதிக விளைச்சல் தரக்கூடிய மரவகைகள் விவசாயிகளை சென்றடையாதது் அதிக விளைச்சல் தரக்கூடிய மரங்களின் குளோன் மற்றும் விதைகள் கிடைக்காதது் ஆராய்ச்சியாளர்கள், நாற்று உற்பத்தியாளர்கள், விவசாயிகள் மற்றும் மரம்சார்ந்த தொழிற்சாலை ஆகியவர்களுக்குள் ஒருங்கிணைப்பு இல்லாமை ‘வேளாண்மை காடுகளை’

அமைத்து பராமரிக்க தகுதியான தொழிளாளர்கள் மற்றும் இயந்திரங்கள் இல்லாதது என்பன சில முக்கிய காரணங்களாகும்.

இந்த சூழ்நிலையில், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் நிதியுதவியுடன் 2008 முதல் 2014 வரை ஏழு ஆண்டுகளாக ''வேளாண்மை காடுகள் சார்ந்த மதிப்புக் கூட்டு சங்கிலி'' என்ற திட்டம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் ஆராய்ச்சியாளர்கள், மரம் சார்ந்த தொழிற்சாலைகள், விவசாயிகள் மற்றும் வங்கிகள் என சம்பந்தப்பட்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இவ்வங்கத்தினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டதனால் சவுக்கு, மலைவேம்பு, தீக்குச்சி மரம், சுபாபுல், குமிழ், கடம்பு ஆகிய மரங்கள் வளர்ப்பு அதிகரித்தது. இன்று ஒப்பந்த முறை வேளாண்மை காடுகள் தமிழகத்தில் சுமார் 70000 ஏக்கராவில் 25000 விவசாயிகளால் வளர்க்கப்படுகினறது. மேலும் மர உற்பத்தித்திறன் ஒரு ஹெக்டருக்கு 80-100 டன் என்ற அளவிலிருந்து 150 டன்னுக்கு அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாமல், 4-5 வருடங்களில் அறுவடை செய்தல் என்ற நிலை மாறி 3 வருடங்களிலிலேயே மரங்களை அறுவடை செய்யும் நிலை உருவாக்கப்பட்டது.

மேலும் மரங்களை வாங்கும் நிறுவனங்கள் குறைந்த பட்ச விலையை நிர்ணயித்த காலத்திற்குள் வழங்க வழிவகை செய்யப்பட்டதால் விவசாயிகள் நல்ல முறையில் பயணடைந்தனர். மரம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு உரிய தரத்தில் நல்ல இடுபொருள் உரிய காலத்தில் கிடைக்கவும் இத்திட்டம் பெரும் உதவியாக இருந்தது. வங்கிகளின் கடன் உதவியும் காப்பீட்டு நிறுவனங்களின், மரக் காப்பீட்டுத் திட்டமும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டதால், விவசாயிகள் மரவளர்ப்பில் ஊக்கத்துடன் ஈடுபட்டார்கள். இத்திட்டதின் விளைவாக மரக்கன்றுகளுக்கு அதிக தேவை ஏற்பட்டதால் புதிய நாற்று உற்பத்தியை ஒரு தொழிலாக விவசாயிகள் துவங்கி பயன் பெற்றனர். இயந்திரங்களை கொண்டு மரக்கன்றுகளை நடுவதற்கும், வளர்ந்த பிறகு மரங்களை வெட்டுவதற்கும் என பல புதிய தொழில்கள் கிராமப்புரங்களில் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் இத்தகைய சிறப்பான செயல்பாட்டை 12ஆவது உலக வங்கி குழு வெகுவாக பாராட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இத்திட்டம் நிறைவு பெற்றுவிட்டதால் இது நாள் வரை ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்பு தளம், விவசாயிகளுக்கும் மரம் வளர்ப்புக்கும் தொடர்ந்து பயன்பட வேண்டும் என்ற முக்கிய நோக்கத்தோடு தற்போது வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முயற்சியில் ''மரத்தொழிற்சாலை சார்ந்த வேளாண்மைக் காடுகள் கூட்டமைப்பு'' உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுமத்தில், ஆராய்ச்சி நிறுவனங்கள், மரத்தொழிற்சாலைகள், மர வளர்ப்பு குழுக்கள், வனத்துறை, வேளாண்மை விரிவாக்க மையங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், மரநாற்றங்கால் உரிமையாளர்கள்,

வேளாண்மை காடுகள் அமைப்பாளர்கள் மரம் வெட்டும் நிறுவனங்கள் ஆகியவைகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் என சுமார் 100 உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர். கடந்த 7 வருட உழைப்பால் மரம் வளர்ப்பில் ஏற்பட்ட முன்னேற்றம் மேலும் தொடர வேண்டும் என்பதே இக்கூட்டமைப்பின் முக்கிய நோக்கமாகும். இக்கூட்டமைப்பினர் ஒருங்கிணைந்து செயல்பட்டால் நல்ல முறையில் அதிக பரப்பளவில் வேளாண்மை காடுகள் வளர்க்கப்பட்டு விவசாயிகளும், மரத்தொழிற்சாலைகளும் பயன்படுவததோடு சுற்றுச்சூழல் மேம்பாடு அடையும் என்பதால் அனைத்து தரப்பினரும் பயனடைய நல்ல வாய்ப்புள்ளது.

இந்த தனித்துவமான கூட்டமைப்பு 21-3-2015 அன்று வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரால் துவக்கி வைக்கப்பட உள்ளது. துவக்க விழாவில் தமிழக வனத்துறையின் கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் முனைவர். சு. கிருஷ்ண குமார், இ.வ.ப., சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார். மேலும் நபார்டு வங்கியின் மேளாளர் திரு.ஞ.நடராஜன், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தை சேர்ந்த முனைவர். சு. இசக்கில் மற்றும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துறை இயக்குநர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்